©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No.31] CHENNAI, WEDNESDAY, AUGUST 5, 2026
Aadi 20, Parabhava, Thiruvalluvar Aandu–2057

## Part III—Section 1(a)

**General Statutory Rules, Notifications, Orders, Regulations, etc., issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

*Pages*

CO-OPERATION, FOOD AND CONSUMER PROTECTION DEPARTMENT

Draft Amendments to the Tamil Nadu Food Security Rules, 2017 .. .. 38-39

## NOTIFICATIONS BY GOVERNMENT

CO-OPERATION, FOOD AND CONSUMER PROTECTION DEPARTMENT

**Draft Amendments to the Tamil Nadu Food Security Rules, 2017**

*[G.O. Ms. No. 53, Co-operation, Food and Consumer Protection (B2), 21st July 2026, ஆடி 5, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No. SRO A-15/2026.—The following draft amendments to sub-rule (1) of rule 7 and sub-rule (2) of rule 8 of the Tamil Nadu Food Security Rules, 2017, which are proposed to be made in exercise of the powers conferred by sub-section. (1) of section 40 of the National Food Security Act, 2013 (Central Act 20 of 2013), is hereby published for information of all persons, as required under sub-section (1) of the said section 40.

2. Notice is hereby given that the draft amendments will be taken into consideration on or after the expiry of fifteen days from the date of publication of this notification in the *Tamil Nadu Government Gazette*. Any objection and suggestion, which may be received from any person with respect to the draft amendments before the expiry of the aforesaid period will be duly considered by the Government of Tamil Nadu.

3. Objections and suggestions, if any, shall be addressed to the Director of Civil Supplies and Consumer Protection, Ezhilagam, Chepauk, Chennai-600 005.

Draft Amendments

In the said Rules,

(1) in rule 7, for sub-rule (1), the following sub-rule shall be substituted, namely: -

"(1) The District Supply Officer of the districts except Chennai and the Taluk Supply Officer of the Taluks and the Assistant Commissioners of Civil Supplies and Consumer Protection Department in Chennai shall be the Nodal Officers to ensure smooth implementation of public distribution system within their respective jurisdictions";

(2) in rule 8, for sub-rule (2), the following sub-rule shall be substituted, namely: -

**"(2) (i)** The Members of the Vigilance Committee except the designated Government servants and elected representatives at Shop Level, Taluk and District Level in all Districts except Chennai shall be nominated by the District Collector concerned.

**(ii)** In Chennai, the Members except elected representatives of Shop Level, Zonal Level shall be nominated by the Joint Commissioner of Civil Supplies and Consumer Protection Department.

**(iii)** The Members of Vigilance Committee except designated Government servants and elected representatives of Chennai District Level and at State Level shall be nominated by the Commissioner of Civil Supplies and Consumer Protection Department".

P. AMUDHA,
*Additional Chief Secretary to Government.*

**அறிவிக்கை.**

*[G.O. Ms. No. 53, Co-operation, Food and Consumer Protection (B2), 21st July 2026, ஆடி 5, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

2013–ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்திய சட்டம் 20/2013) 40–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகளைச் சேர்ந்த 7–ஆம் விதியின் (1) துணைவிதி மற்றும் 8–ஆம் விதியின் (2) துணைவிதி ஆகியவற்றில் பின்வரும் வரைவு திருத்தங்களை மேற்கொள்ள கருதுவதால், மேற்சொன்ன சட்டத்தின் 40–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் கோரப்பட்டவாறாக அனைத்து நபர்களின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிட்ட நாளிலிருந்து பதினைந்து (15) நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், மேற்சொன்ன வரைவு திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என இதனால் அறிவிக்கப்படுகிறது. மேற்சொன்ன கால அளவு முடிவடையும் முன்னர், யாதொரு நபரிடமிருந்து வரப்பெறுகிற வரைவு திருத்தங்கள் தொடர்புடைய ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு உரியவாறு பரிசீலிக்கும்.

3. மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை, இயக்குநர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, எழிலகம், சேப்பாக்கம், சென்னை-600 005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**வரைவு திருத்தங்கள்.**

மேற்சொன்ன விதிகளில்,

(1) விதி 7-இல், துணைவிதி (1) க்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:-

"(1) சென்னை நீங்கலாக ஏனைய மாவட்டங்களின் மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் வருவாய் வட்டங்களின் வட்ட வழங்கல் அலுவலர் மற்றும் சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் உதவி ஆணையர்கள் ஆகியோர் தங்களுக்குரிய அதிகார வரம்பிற்குள் பொது விநியோகத் திட்டத்தினை சீராக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான ஒருங்கிணைப்பு அலுவலர்களாக இருப்பார்கள்";

(2) விதி 8–இல், துணை விதி (2)–க்குப் பதிலாக பின்வரும் துணை விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

"(2) (i) சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும், நியாயவிலைக் கடை அளவிலும், வட்டம் மற்றும் மாவட்ட அளவில் நியமிக்கப்பட்ட அரசுப் பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தவிர, கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படுவர்.

(ii) சென்னையைப் பொறுத்தமட்டில், நியாயவிலைக் கடை அளவிலும், மண்டல அளவிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைத் தவிர உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இணை ஆணையரால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.

(iii) சென்னை மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் நியமிக்கப்பட்ட அரசுப் பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிதிநிதிகளைத் தவிர, கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையரால் நியமிக்கப்படுவர்."

**பெ. அமுதா**,
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU